★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8946/78

மலர்: 21 வைகாசி: 8 ஜ-அகிர்: 24 இதழ்: 102

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-5-79

உங்கள் வீட்டிலும்
ஒரு டெலிவிஷன்
(12'' கறுப்பு வெள்ளை)
முதலில் செலுத்தவேண்டியது 500/- மட்டுமே.
மாதாந்தம் ரூ. 99/50 பன்னிரெண்டு மாதங்கள் செலுத்த வேண்டும். இன்று முதல் டிபாசிட் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இன்னும் ஆறு வாரங்களில் முதலில் வரும் 50 பேருக்கு மட்டுமே இந்த அரிய வாய்ப்பு. இலங்கையில் இந்தச் சலுகை நமது நிறுவனத்தில் மட்டுமே உண்டு.
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7715.

## கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகம்

[கொழும்பு]

கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகம் அடுத்த வருடம் அக்டோபரில் அமைக்கப்படும்.

வந்தாறுமூலையில் அமைக்கப்படும் இப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான, கலை, விவசாய பிரிவுகள் இருக்குமென்றும் முதலில் 250 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது.

பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் இங்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அமைச்சர் தேவநாயகம் தெரிவித்துள்ளார். [ம]

# தமிழீழ புலித்தடைச் சட்டம்

# ஒருவருடம் நீடிப்பு

## நிலைமைமிகமோசம் - தேவா

### மாற்றுத்திட்டம் பற்றி 'அமிர்' யோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதுபோன்ற இயக்கங்களையும் தடைசெய்யும் திருத்தச் சட்டமூலம், பாராளுமன்றத்தில் நேற்றுமாலை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இத்திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 136 பேரும் எதிர்த்து எட்டுப் பேரும் வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே எதிர்த்து வாக்களித்திருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் எவரும் வாக்கெடுப்பு நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

### நிலைமை மிக மோசம்

பாராளுமன்றம் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கூடிய போது, திருத்தச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் பேசுகையில், கடந்த ஒரு வருட காலத்தில் நிலைமை மோசமாகி விட்டதினால்தான், இச் சட்டத்தை மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், கூட்டணி என்று ஒன்று இப்பொழுது இல்லை என்றும் கூறினார்.

### அமிர் யோசனை

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், புலித்தடைச் சட்டம் மூலம் பெயர் குறிப்பிடாத பல ஸ்தாபனங்களையும், இயக்கங்களையும் கூடஅரசு தடை செய்து விட்டது என்று கண்டித்தார்.

'தமிழ் மக்களினால் ஏற்கக் கூடிய நியாயமான ஒரு மாற்றுத் திட்டத்தை அரசு சமர்ப்பித்து, அது நியாயமான தொரு மாற்றுத் திட்டம் என்று எனக்குப் பட்டால், என்மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழ் மக்களுக்காக அதன் விளைவுகள் என்னவாக இருந்தாலும் அதனை நான் ஏற்றுக்கொள்வேன். அதற்காக எனது உயிரைத் தியாகம் செய்யவும் நான் தயா

(6ம் பக்கம் பார்க்க)

## சிவில் உடையில் வந்து கலாட்டா; ஹோட்டல் சேதம்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஹோட்டலொன்றில் சிவில் உடையில் சாப்பிடவந்த பொலிஸார் இருவர் கலாட்டா செய்ததினால் ஹோட்டல் சேதமடைந்தது.

சாப்பிடவந்த இருவரும் பணம்கொடுக்கையில் ஹோட்டல் உரிமையாளருடன் தகராறு செய்ததாகவும், இதனைத் தொடர்ந்து வாக்குவாதம் ஏற்பட்டு கலாட்டா நடந்ததாகவும் கூறப்படுகிறது

இருவரும் வெளியில் வந்த போது ஹோட்டலுக்கு முன்னால் நின்றவர்களால் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தகவல் கிடைத்ததும் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ் அதிகாரி அமைதியை நிலைநாட்டினார். ஹோட்டலில் கலாட்டா செய்ததாகக் கூறப்படும் இருவரும் காயத்துடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காக ஹோட்டலுக்கு பொலிஸ்காவல் போடப்பட்டுள்ளது. [கொ]

நாவாந்துறைச் சம்பவம்:

## கைதான உறுப்பினர் பிணையில் விடுதலை

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறையில் இருகட்சியினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதான யாழ் மாநகரசபை உறுப்பினர் அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை பொலிசாரினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதான மற்றும் சிலரும் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர். பொலிசார் தொடர்ந்து அப்பகுதியில் கடமையாற்றுகின்றனர். [க]

## மே:22 'ஒடுக்கப்படும் ஈழத்தமிழர்தினமாக அமெரிக்க மாநில சட்டசபை பிரகடனம்

### 'சிவா'விடம் இன்று கவர்னர் கையளிக்கின்றார்

[கொழும்பு]

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொள்ளும் அநீதிகளைக் கண்டித்து அமெரிக்க-மஸாச்சு செட்ஸ்' மாநில சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரதி ஒன்றை அம்மாநில கவர்னர் இன்று அம்மாநிலத்தில் வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்திடம் நேரில் கையளிப்பார்.

இதன் மற்றொரு பிரதி இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனாவுக்கு இன்று அனுப்பி வைக்கப்படும்.

சிறிமா ஆட்சிக்காலத்தில் இலங்கைக் குடியரசு தினமான மே 22ம் திகதியை 'ஒடுக்கப்படும் ஈழத் தமிழர் தினம்' எனப் பிரகடனப்படுத்தியுள்ள 'மஸாச்சுசெட்ஸ்' சட்டசபை தனது கண்டனத் தீர்மானத்தை இலங்கை ஜனாதிபதியிடமும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரிடமும் சமர்ப்பிப்பதற்கு பொருத்தமான தினமாக மே 22ம் திகதியைத் தெரிவுசெய்திருக்கிறது.

நிர நில அரசின் கண்டனத் தீர்மானத்தை நேரில் கையேற்கவருமாறு அம்மாநிலத்தின் கவர்னர் விடுத்த அழைப்பை ஏற்றே திரு. சிவசிதம்பரம் மூன்றுநாட்களுக்கு முன்னதாக அமெரிக்காபயணமானார்.

அமெரிக்க - இலங்கை தமிழர் சங்கத்தினதும் மற்றும் சில இயக்கங்களினதும் ஆதரவில் அமெரிக்க போர்ட்ஹாம் பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 26-ம் திகதி நடைபெறும் 'தமிழ் ஈழம்' பற்றிய மாநாட்டில் கலந்துகொள்ளும் திரு சிவசிதம்பரம் அமெரிக்காவில் 10 நாட்களும் இங்கிலாந்தில் ஒருவாரமும், ஜெர்மனி பிரான்ஸ் ஆகியநாடுகளில் சில நாட்களும் தங்கியிருப்பார். [ம-இ]

## பருத்தித்துறையில் அமுலாக்கப்பட்ட 'ஊரடங்கு' பதற்றம் நீங்கியது!

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் நேற்று முன் தினமிரவு இருகோஷ்டிகளுக்கிடையே மூண்ட கைகலப்பின் எதிரொலியாக ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பதரை மணிமுதல் காலைவரை அதிகாரபூர்வமற்ற 'ஊரடங்கு' அமுல் நடத்தப்பட்டு மக்கள் நடமாட்டம் தடைசெய்யப்பட்டது.

இக்கைகலப்பின் எதிரொலியாக ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதாகவும் அவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

மக்கள் நடமாட்டம் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பல வழக்குகள் தொடர்பாக பொலிசாரினால் தேடப்பட்டுவந்த இருவர் நேற்றுமுன் தினமிரவு கைதுசெய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

பொலிசார் மேற்கொண்ட துரிதநடவடிக்கைகளைத்தொடர்ந்து பதற்றநிலை நீக்கப்பட்டு இப்பகுதியில் பூரண அமைதி நிலவுகிறது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் பொலிசார் மேற்கொண்ட உஷார்பந்தோபஸ்து நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# தஞ்சையில் கலைஞரும் போட்டியிடமாட்டார்!

## வேட்பாளர் பெயர்கள் இன்று வெளியாகும்

(திருச்சி)

தஞ்சாவூர் லோகசபை இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி போட்டியிட மாட்டார்!

இத்தகவலை திரு மு. கருணாநிதி நேற்று திருச்சியில் செய்தி நிருபர்கள் மத்தியில் வெளியிட்டார்.

தஞ்சாவூர், நாகபட்டிணம் இடைத்தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் கடைசித் தினம் நாளை ஆகும். தி.மு.க. இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களின் பெயர்கள் இன்று அறிவிக்கப்படும்.

இத்தொகுதிக்கான தேர்தல் அடுத்தமாதம் 17-ல் நடக்கிறது.

## விளம்பரம்

### விற்பனைக்கு

9 ஸ்ரீ வெள்ளை நிற 3 மீற்றர் 404 கார் றேடியோவுடன் விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். C. கனகையா, 64, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7239.

2492

### வகுப்புகள்

P. M. G's Certificate (Special) ஐப்பசி மாத பரீட்சைக்கான துரித வகுப்புகள் இளைப்பாறிய கம்பி இல்லாத் தந்தி (வயலர்ஸ்) இலாகுனரால் ஆனி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. விபரங்கள் நேரில். காலை 8—10.30 மணிக்கு இடையில் வரவும். விபரங்களுக்கு: ஞானம், 37, குமாரவீதி, நல்லூர்.

2507

### திருத்தம்

29-4-79ந் திகதி ஈழநாட்டில் வெளியான ஏழாலை அம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான முக்கிய அறிவித்தலில் பொருளாளரின் பெயர் தவறுதலாக செ. சுந்தரம் என்று பிரசுரிக்கப்பட்டுவிட்டது அதைச் ச. சுந்தரம் என்று மாற்றிக்கொள்ளவும். 2515

### கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழ்க்காங்கிரஸ் பொதுக் கூட்டம், இம்மாதம் 26ம் தேதி தட்டாதெருச் சந்தியில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில், தமிழ்க் காங்கிரஸ் உப- தலைவர் திரு. எஸ், ஆர். கனகநாயகம் செயலாளர் திரு குமார்பொன்னம்பலம் ஆகியோரி உரை நிகழ்த்துவார்கள்

இன்று 13ம் வட்டாரத்தில் தமிழ் காங்கிரஸ் கிளை அங்குரார்பணமும், கருத்தரங்கும் நடைபெறவிருக்கிறது.

[ஈ-அ]

### சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### சுன்னாகம்

### அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 4000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவுச் சீனியும் கேள்விபத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. வெற்றுச் சாக்குகளுக்கு ரூபா 250/-உம், கழிவு சீனிக்கு ரூபா 50/-உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி, கேள்விப்பத்திரங்களைக் காரியாலய வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் 28-5-79 திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்

19-5-79 2511

### சங்கானை ப. நோ. கூ. சங்கம்

### கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 8,000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபால் மூலம் இடது பக்க மூலையில் "வெற்றுச் சாக்குகள் கேள்வி" என்று எழுதப்பட்டு "பொதுமுகாமையாளர், சங்கானை ப நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

விண்ணப்பமுடிவு திகதி 26- 5- 79

பொதுமுகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

18 5-79 2501

## பனம் பொருள் அபிவிருத்தி சபை

## பனம்விதைகள் விநியோகம்

பனை உற்பத்தியில் புதிதாகவோ மீள்நடுகை மூலமோ ஈடுபட விரும்பும் காணிச் சொந்தக்காரர்கள் தமக்குத் தேவையான பனம் விதைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பனம் பொருள் அபிவிருத்தி சபையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிடப்படுபவற்றை உள்ளடக்கியவையாக அமைதல் வேண்டும்.

1 காணிச் சொந்தக்காரரின் பெயர், விலாசம்,
2, காணி அமைந்திருக்கும் பிரதேசம்.
3 பரப்பளவு.
4 தேவையான பனம்விதைகளின் எண்ணிக்கை,
5. பனம் விதைகள் கொடுபடவேண்டிய இடம்.
6. பனம் விதைகள் தேவைப்படும் உத்தேச திகதி.

தலைவர்
பனம் பொருள் அபிவிருத்தி சபை,
தேசிய வீடமைப்பு திணைக்கள செயலகம்,
யாழ்ப்பாணம். 2500

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா துரைஐயா

அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா துரைஐயாவின் அன்பு மனைவி திருமதி தங்கம்மா துரைஐயா காமாகிவிட்டார். இவர் திவ்வியமணி துரைசிங்கம், வைத்திய நிபுணர் தங்கத்துரை (U K), பஞ்சலிங்கம் (U K), இராஜசிங்கம் (U K), துரைரத்தினசிங்கம், ஜெயமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் (U K), பத்மினி, டாக்டர் பாமலோஜினி (யாழ் அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அருமை மாமியாரும், தம்பித்துரை (மலேஷியா), தம்பிரத்தினம் (மலேஷியா) புவனேந்திரன் (U K) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (23-05-79) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்

"துரைத்தங்கம்"
துரைஐயா அவெனியூ,
அச்சுவேலி

2509

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 8-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(22-5-1979)

**மேடம்:** போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலை தூக்கும், பொருள் வரவிற்கும இடமுண்டு, நல்ல தினம்.

**இடபம்:** எதிலும் அவசரப் போக்கு தென்படும், சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம், கடந்தகால நினைவுகள் வேதனையைத் தரலாம், மனத் திடம் வேண்டும்.

**மிதுனம்:** கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும், ஆசிரியர்களுக்குப் புகழ் குவியும், சிலர் இன்று புதிய வாகனம் ஒன்றும் கொள்வனவு செய்யலாம்.

**கடகம்:** ஒளிமயமான எதிர்காலத்திற்கு இன்று வித்திடப்படலாம், சிலர் வாழ்க்கையில் திருமணப் பேச்சும் இடம் பெறும், தங்கையின் முன்னேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

**சிங்கம்:** தானிய நஷ்டத்தால் கவலை ஏற்படும், தனி வழியை நாடுவீர்கள், அமைதி பறக்கும்.

**கன்னி:** வாழ்க்கை கரும்புபோல் இனிக்கும். காதல் வட்டாரங்களில் கலகலப்புத் தென்படும், குடும்பத்திலும் சுவையான சம்பவங்கள் இடம் பெறும்.

**துலாம்:** கழுகும்பார்வை உடையவனை வட்டமிடும், கடமையில தடைகள் ஏற்படும், நண்பர் ஒருவரிடம் பகை தோன்றும்.

**விருச்சிகம்:** கைகொடுத்து உதவுவதற்குத் தந்தை முன்வருவார். காரியங்களில் வெற்றியும் கிட்டும், நீண்டநாள் எதிரிகள் இன்று நண்பர்கள் ஆவார்கள்.

**தனுசு:** கடமையில் முதலிடம் இன்று கிடைக்கும், பதவி உயர்வுக்கும் இடமுண்டு, வியாபாரத் துறையில் தொடர்புகள் பெருகும், உற்சாகமான தினம்.

**மகரம்:** வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும், புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள், சகல துறைகளிலும் முன்னேற்றமுண்டு.

**கும்பம்:** நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும், தொழிலாலே தொல்லை தோன்றும், இறை வழிபாடு நன்று.

**மீனம்:** அடி சறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம் பெறலாம், ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம் நீர்வேலி

### வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திர அறிவித்தல

மேற்படி சங்கத்தின் வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. 29-05-79 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 28-05-79 திகதி வரை மேற்படி சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம் கேள்வி விண்ணப்பப் பத்திரம் ஒன்று, ரூபா ஒன்று வைப்புப்பணம் ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள், பொது முகாமையாளர், வலி-கிழக்குத் தென்பகுதிப் ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். இக்கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை சங்கத்திற்கு உண்டு. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம் என எழுதப்படவேண்டும்.

பொது முகாமையாளர்
251- நீர்வேலி.

## "நெடுந்தீவின் தமிழ்வளம்: ஆய்வு நடத்தவேண்டும்"

[நெடுந்தீவு]

"நெடுந்தீவில் பேசப்படும் தமிழ், பாவிக்கப்படும் இலக்கணமரபியல் சொற்கள் பற்றி மொழி ஆராய்ச்சி செய்பவர்கள் கட்டாயமாக ஆராய்ந்து இப்பூமியின் புராதன நிலையை அறியமுயற்சிகள் எடுக்கவேண்டும்."

இவ்வாறுஉருவாகதிருநிலைப் படுத்தப்பட்டபின் தமது பிறந்தகிராமத்துக்கு வருகை தந்த அருட்திரு. ஏ. யோ. வி. சந்திரகாந்தன் அடிகளார் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இங்குள்ளசாதாரண மக்கள் விவசாயிகள் ஆகிய சகலருமே நல்ல தமிழ் அறிவு உடையவர்களாக இருக்கிறார்கள். இத்தீவு அறிஞர் தனிநாயகம் அடிகள் போன்ற எத்தனையோ அறிஞர்களையும், வித்துவான்களையும் தமிழ் உலகிற்கு அளித்துள்ளது.

நெடுந்தீவு மண்ணில் தமிழ் தானகவே செழித்து வளர்கிறது இங்குள்ள மக்களின் அறிவு இத்தீவுக்கு நடை வரும் போது தாண்டிவரும் சமுத்திரத்தைவிட ஆழமானது".

பண்டத்தரிப்புப் பங்குகுரு அருட்திரு இ. யோசேப்பு அடிகள் பேசுகையில், அடிகள் சந்திரகாந்தனின் 'இந்திய மக்களின் இறைவன்' என்ற நூல் அவரின் கல்வி வளர்ச்சியையும். அறிவையும் புலப் படுத்துகிறது என்றார்.

திரு ச. சுப்பரமணியம், நெடுந்தீவு மக்களின் சார்பில் வாழ்த்துரை வழங்கினார். திரு. அ. அமிர்நாதர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

[ஒ-அ]

சங்கானை கோரக்கொலை:

## தேடப்பட்ட மூவரும் கோர்ட்டில் சரண்

(மாவிட்டபுரம்)

கடந்த 15ம் திகதி சங்கானைப் பொலிஸ்பகுதியில் ஓடும் பஸ்தர் ஒருவர் கோரமாகக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகத் தேடப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் மல்லாகம நீதிமன்றத்தில் சரண் புகுந்தனர்.

சங்கானைப் பொலிஸ்பகுதியைச் சேர்ந்த சித்தன்கேணியில் கடந்த 15ம் திகதி செலவர் சின்னத்துரை என்ற ஓடும் பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டப்பட்டும் துப்பாக்கியால் சுடப்பட்டும் கோரமாகக் கொலை செய்யப்பட்டது குறித்து சங்கானைப் பொலிசார், கொலையுண்டவரின் சகோதரர் செல்லர் சின்னத்தம்பியையும் அவரது புதல்வர்கள் சற்குணசிங்கம் அல்லது குணம், விஜயசிங்கம் அல்லது விஜயன் ஆகியோரையும் தேடிவந்தனர்

இம்மூவரும் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் மல்லாகம் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து இம்மாதம் 30ம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார். (அ)

நெடுந்தீவு கொலைவழக்கு

## மரணவிசாரணைப்பிரதி வழங்கக் கட்டளை

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு கொலை வழக்கில் இரு சாட்சிகள் வராததினால் நேற்று விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 9-3-77 ல் நெடுந்தீவில் மரியான் ஞானப்பிரகாசத்தைக் கொலை செய்ததாக அருளப்பு செல்லத்துரை, அருளப்பு அகஸ்தின், தொம்பன் மிக்கேல், மரியான் அருள்நாயகம், மரியான் பிரான்சிஸ் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 4ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி எஸ். எஸ். சரவணமுத்து, சட்டத்தரணி பி. கதிரவேலு ஆகியோரின் உதவியுடன் ஆஜரானார். 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். நாகராசாவும் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தாவும், 5ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செல்வி தனையசிங்கமும் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார்.

சட்டத்தரணி ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), மரண விசாரணைப் பிரதியும். இறந்தவரின் வாக்குமூலப் பிரதியும் - எதிரிதரப்பினருக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி அவற்றை வழங்கக் கட்டளையிட்டார்.

விசாரணை செப்டம்பர் 10ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது. [ஈ-அ]

### சுருவில் றோ. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### அங்குரார்ப்பணக்கூட்டம்

24-5-79 வியாழக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெறும். பெற்றோர், பழைய மாணவர் நலன் விரும்பிகள் யாவரையும் அழைக்கின்றேன்.

2516 அதிபர்

ஈழநாடு
The Eelanaadu

## யாழ்ப்பாண மாநகரசபை

புதிய விகிதாசாரமுறையின் கீழ் கட்சி அடிப்படையில் ஒன்பது மாநகரசபைகளுக்குப் புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலில் யாழ்ப்பாண மாநகரசபையும் ஒன்று.

பத்து வருடங்களுக்குமுன் வெவ்வேறு காரணங்களுக்காகவும் பொதுஊழல் குற்றச் சாட்டுக்களுக்காகவும் மாநகரசபைகள் உட்பட உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அப்போதிருந்த அமைப்பு விதிகளின்படி உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் அந்தந்த வட்டாரங்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு அந்தந்த வட்டாரங்களுக்கென வேட்பாளர்கள் கட்சிரீதியிலும் சுயேச்சையாகவும் போட்டியிட்டனர்.

ஒவ்வொரு வேட்பாளரும் மக்களின் பிரதிநிதியா மாநகரசபைக்குச் செல்வதற்கும் பின்னர் மேயராவதற்கும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவர். கட்சிகளும் போட்டிபோட்டுக் கொண்டு இந்த முயற்சியில் ஈடுபடும்.

கடந்தகாலங்களில்யாழ்ப்பாண மாநகரசபை மேயர்களை ஏற்றி இறக்குவதில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. ஒருவர் மேயராக ஏற்றப்பட்ட ஒரு மாதத்திலேயே அப்பதவியிலிருந்து இறக்கப்பட்ட வேடிக்கையான நிகழ்ச்சியும் யாழ் மாநகரசபையில் நிகழ்ந்திருக்கிறது.

மேயர் தெரிவுக்காக கட்சிகள் ஒன்றுசேருவதும் பின்னர் மேயரை இறக்குவதற்காக அதேகட்சிகள் வெவ்வேறாகப் பிரிந்து மற்றவர்களுடன் கூட்டுச்சேர்வதும் இதில் பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதும் யாழ்ப்பாணம் மட்டுமல்ல நாடே அறிந்தசம்பவங்கள்.

ஒருவர் மேயராக வந்து பஸ் நிலையம் அமைப்பதற்கு அத்திவாரமிடுவதும் சில மாதங்களுக்குள்ளேயே அவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு மற்றொருவர் மேயராக வந்து வேறொரு இடத்தில் புதிதாக பஸ் நிலையத்துக்கு அத்திவாரமிடுவதும் யாழ் நகர மக்கள் கண்ட நிகழ்ச்சிகள். நவீனசந்தைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட கதைகளும் நிறைய உண்டு. ஏன் துரையப்பா -துரைராஜா கோஷ்டியென யாழ் மாநகரசபையில் நடந்த மோதல்கள் சம்பவங்கள் யாழ் நகரம் அனுபவித்த நிகழ்ச்சிகள். இதனால் மக்களின் வரிப்பணம் வீணாகச் செலவானது.

நவீனசந்தையில் கடை கொடுக்கப்பட்டது சம்பந்தமாகவும் மாநகரசபை நியமனங்களிலும் மற்றும் நிர்வாகத்திலும் ஊழல்குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டதும் உண்டு.

யாழ். மாநகரசபை கலைக்கப்பட்ட சம்பவம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் நிகழ்ந்ததும் திறப்புக்காகப் பிரச்சினைகள் நடந்ததும் மறந்துவிடக் கூடியவையல்ல.

இப்பொழுது இப்படியான்பிரச்சினைகள் ஏற்படாத வகையில் ஒரு கட்சியின் பிரதிநிதிகளை பெரும்பான்மைப் பலத்துடன் தெரிந்தனுப்பியிருக்கின்றனர். மேயரும், உதவிமேயரும் கூட மக்களே தெரிவுசெய்தனுப்பியிருப்பதால் அதிலும் பிரச்சினையல்ல.

நகரின் அபிவிருத்தி வேலைகள் இன்னும் பல இருக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களாக யாழ். மாநகர விசேட ஆணையாளராகக் கடமையாற்றிவரும் திரு. க. சிவஞானம் மிகச்சிறந்த முறையில் சேவையாற்றியிருக்கிறார் என்பதையும், நகரை அபிவிருத்தி செய்திருக்கிறாரென்பதையும் எவரும் மறுக்க மாட்டார்கள். போதியநிதியும் தேடிவைத்திருக்கிறார்.

புதியமேயரும் புதியசபையும் சிறந்தமுறையில் தமது கடமையைச் செய்வார்களென எதிர்பார்ப்போம்.

# "யாழ். மாநகரசபைத் தேர்தலில் தமிழீழலட்சியம் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது"

## — யாழ். மேயர் விஸ்வநாதன்

(யாழ்ப்பாணம்)

"ஒற்றை ஆட்சியா தனித் தமிழ் நாடா என்ற இரு கோரிக்கையை முன்வைத்து நடந்துமுடிந்த யாழ் மாநகர சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் 77ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தனித் தமிழ்நாடு தான் தமிழ்மக்களின் ஒரே இலட்சியம் என்ற மக்கள் தீர்பை நிலைநாட்டிவிட்டனர்"

இவ்வாறு யாழ் கச்சேரியில், யாழ். மாநகர சபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது யாழ். மாநகர சபை மேயராகத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணி திரு. ஆர் விசுவநாதன் பெரும் தொகையான ஜனத்திரள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

திரு ஆர். விசுவநாதன் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டதும் ஆதரவாளரின் பலத்த கரகோஷத்திற்கும், மகிழ்ச்சி ஆரவாரத்திற்கும் மத்தியில் திரு விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில்,

"உரிமைக் கோரிக்கைக்குத் தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவை உலகம் அறிந்துள்ளது. விகிதாசார அடிப்படையில் இத்தேர்தல் நடந்தபடியால் நாம் 18 ஸ்தானங்களைப் பெற்றுள்ளோம் நேரடிப் போட்டி நடந்திருந்தால் நாம் மேலும் பல ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கமுடியும்.

"தமிழ் மக்களைக் கூட்டணியில் இருந்து பிரிக்கமுடியாது என்பதை நடந்து முடிந்த "குட்டிப் பொதுத்தேர்தல்' முடிவுகள் ஆட்சியினருக்கு எடுத்துக்காட்டியுள்ளது. மந்திரிமார்களால் தமிழ் மக்களை விலைக்கு வாங்கிவிடமுடியாது. என்பதை ஆட்சியினருக்குத் தமிழ் மக்கள் எடுத்துக்காட்டிவிட்டனர்.

"தமிழ் மக்கள் கூட்டணி மீது வைத்த நம்பிக்கைக்கும் கூட்டணியினர் என்மீது வைத்த நம்பிக்கைக்கும் ஏற்ற முறையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ். நகரை ஒருநவீன அழகாபுரியாக ஆக்கி, மக்களின் இன்னல்களைப் போக்கி நல்ல ஆட்சியை நீதிவழிநின்று செயல்படுத்துவோம்"

(கோ)

# "குற்றவாளிகளைப் பிடிக்க மக்கள் உதவவேண்டும்"

[உடுப்பிட்டி]

"குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் சமூகத்தின் விரோதிகள், இச்சமூதாய விரோதிகளைப் பொலிஸார்-பொதுமக்கள் ஒத்துழைப்பு, நல்லுறவின் மூலமே ஒழித்துக்கட்ட முடியும்" என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. நிஹால் ஜெயசேகரா நெல்லியடி சுடரொளி சன சமூக நிலையத் திறப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நான் உடுப்பிட்டி எம் பி திரு. த. இராஜலிங்கத்தின் மாணவன். அவரின்கீழ் கல்வி பயின்றவர் பலர் இன்று பல உயர் அதிகாரிகளாகவும், கலாநிதிகளாகவும் திகழுகின்றனர்.

"நெல்லியடியிலும், பருத்தித்துறையிலும் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. நெல்லியடியில் 25 சைக்கிள்களும், பருத்தித்துறையில் 10 சைக்கிள்களும் களவாடப்பட்டுள்ளன.

"திருடர்கள், காடையர்கள், சட்டத்தை மீறுபவர்களே சமூக விரோதிகள். இத்தகையவர்களாலேயே நாட்டில் அமைதிக்குப் பங்கமேற்படுவதுடன் குற்றச் சம்பவங்களும் அதிகரித்துவருகின்றன. இக்குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் பொதுமக்கள் பொலிஸாருக்கு உதவவேண்டும்"

சுடர்ஒளி சன சமூக நிலையத்தின் கட்டிடத்தை உடுப்பிட்டி எம். பி திரு. த இராஜலிங்கம் திறந்துவைத்தார்.

உடுப்பிட்டி எம். பி திரு. இராஜலிங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. குணநாயகம், நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு வ. இராமச்சந்திரன், கரவெட்டிப் பங்குக் கட்டளைக் குரவர் அருட், திரு. அ. யோ. டொமினிக் அடிகளார் ஆகியோரும் உரையாற்றினர். (அ)

நல்லூர் கோவில்

## உபதபாலகத்திற்கு தொலைபேசி இணைப்புகிடைத்தது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயவீதியிலுள்ள உபதபால் நிலையத்திற்குத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் இலக்கம் 7710 ஆகும்

இத்தபால் நிலையம் நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியில் இங்கு நிறுவப்பட்டது. அவரது முயற்சியினாலேயே தொலைபேசி இணைப்பும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது இததபால் நிலையம் இங்கு ஏற்படுத்தப்பட்டதால் நல்லூர் பக்தர்களுக்கும் குறிப்பாக சுற்றுடலில் உள்ளவர்களுக்கும் பல விதங்களிலும் வசதியேற்பட்டுள்ளது.

(அ)

# புங்குடுதீவில் குடிநீர் விநியோகம் ஆரம்பம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பமாகியுள்ளது. கடந்த பல மாதங்களாக நிலவிய கடும் வரட்சியினால் ஏற்பட்டுள்ள தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்கும் பொருட்டு புங்குடுதீவு கிராம சபைமூலம் இக் குடிதண்ணீர் விநியோகம் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக இக்குடிதண்ணீர் விநியோகத்திற்கான நிதியினைச் சமூகசேவைத் திணைக்களம் ஒதுக்கியது.

புங்குடுதீவு அபிவிருத்திச் சபையினரும், இங்குள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கடந்த வாரம் யாழ். மாவட்ட அமைச்சின் அலுவலகத்தில் திரு. யோகேந்திரா துரைசுவாமியைச் சந்தித்துப் புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்கும்பொருட்டு கூடிய விரைவில் இங்கு குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்குமாறு கோரியிருந்தனர்.

தற்போது புங்குடுதீவில் குடிதண்ணீர்க் கஷ்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஊரதீவு, மடத்துவெளி மக்களுக்கு கிராமசபை 'டிராக்டர்'மூலம் குடிதண்ணீர் விநியோகத்தை நடத்துகிறது. கிராமசபைக்குரிய 'பவுசர்' வண்டி இங்கு வந்ததும் ஏனைய பகுதி மக்களுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். இதற்கான ஒழுங்குகளைப் புங்குடுதீவு கிராம சபை மேற்கொண்டுவருகிறது.

(இ)

## மணிமொழி

நாம் கஷ்டப்பட்டு, மனச்சாட்சிக்கு நியாயமாகப் பக்திசிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றிபெறமுடியாது ஆசை இருந்தால் மட்டும் போதாது; இலட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்துக்குப் சிரத்தை தேவை

—ராஜாஜி.

## மீன்பிடி உபகரணங்கள் விநியோகம்

(நெல்லியடி)

காங்கேசன்துறை, மயிலிட்டி, செம்பியன்பற்று, தாழையடி, பருத்தித்துறைப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடிக் கூட்டுத்தாபனம், மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது.

இப்பகுதி மீனவர்களுக்கு கடந்த வாரம் மானிய அடிப்படையிலும், கடனுதவித் திட்டத்தின் கீழும் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன. வள்ளத்தில் பொருத்தப்படும் எஞ்ஜின்கள், வலைகள் மற்றும் பொருட்களும் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டிருந்தது.

## மக்கள் கருத்து

## இனியாவது இடமாற்றத்தை ஏற்பார்களா?

கரம்பனிலுள்ள ஒருசிலவசதியுள்ளவர்கள் மட்டும் வெளியூர்களுக்குச்சென்று கல்வி கற்க வசதியற்றவர்கள் கல்வி அறிவு பெறமுடியாத பரிதாப நிலையைப் போக்க சுவாமிமகாதேவா ஊருராகச்சென்று பிடி அரிசி சேர்த்துக்கட்டிய பாடசாலை ஒன்று உண்டு

சுவாமிகள் அக்கிராமத்திலுள்ள சகலரும்கல்வியறிவைப் பெறவேண்டுமென்ற உயர்ந்த நோக்குடன் அமைத்த அப்பாடசாலை இன்று கவலைக்கிடமானதாகவுள்ளது. அங்கு கல்வி பயிலும் ஒரு மாணவனை வேறு நகரத்திலுள்ள கல்லூரிக்கு மாற்றவேண்டிப் பாடசாலைக்குச் சென்றால், "பாடசாலையின் அபிவிருத்தி குறைந்துவிடும். உங்கள் பிள்ளையை இங்கேயே படிப்பித்தால்தான் நமது பாடசாலை முன்னேறும்" என்று பிரசங்கம் செய்யும் அவ்வூரைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளை மட்டும் ஊருக்கு வெளியேயுள்ள கல்லூரிகளில் படிக்கவைக்கின்றனர். இதன்மூலம் அவர்களது கல்விப்போதனை சரியில்லை என்பதையே நாம் அறியக்கூடியதாயுள்ளது.

வீட்டுவாசலைத்தாண்டியதும் பாடசாலைக்குள் போய்விடவேண்டுமென்ற எண்ணத்தில் தொடர்ந்து 15வருடங்களுக்கு மேலாக இப்பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் வந்தபோதெல்லாம் அதனை எப்படியோ சமாளித்து விடுகின்றனர்

தற்போது கல்வியமைச்சு வெளிமாவட்டங்களுக்கு மாற்றுவதற்காக யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து 6 வருடங்கள் கடமையாற்றியவர்களின் விபரங்களைத் திரட்டி வருகிறது. நிச்சயம் பல வருடங்களாக இங்கேயே கடமையாற்றும் இவர்களுக்கும் இடமாற்றங்கள் வரவேசெய்யும். இனியாவது தங்களுக்குக் கிடைக்கும் இடமாற்றங்களை ஏற்றுக்கொண்டு சென்று வேறு ஆசிரியர்கள் மூலம் எமது பாடசாலையை புதிய சூழலில் உயர வழிசெய்ய இவர்கள் அனுமதிப்பார்களா? இவர்களதுஇடமாற்றத்திலும் எம்பியும் தலையிடாது கல்விவளர்ச்சிக்கு உதவவேண்டும்.

பழைய மாணவன்
கரம்பன்.

## முன்னர்போல் தொடர்ந்து இயங்க தீர்மானம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழேயே மல்லாகம் தொழிலகம் தொடர்ந்து இயங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுளளது

காங்கேசன்துறைத் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவில் இயங்கும் மல்லாகம் தொழிலகத்தை அளவெட்டி-மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் பொறுப்பேற்க விரும்பியதையடுத்து, அது குறித்து ஆராய வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே. மகாதேவா தலைமையில் மல்லாகம் தொழிலகக் காரியாலயத்தில் கூட்டமொன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மேற்படித் தொழிலகம் தொடர்ந்தும் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஆதரவிலேயே இயங்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

(அ)

# "எம். ஜி. ஆரின் மனமாற்றமே இந்திராகாந்தி தஞ்சையில் போட்டியிடாததற்கு காரணம்"

— தமிழக இ. கா. தலைவர்

## பொறுப்புள்ள தலைவரின் பொறுப்பற்ற கூற்றே இது என்கிறார் எம். ஜி. ஆர்

சென்னை, மே 21

"தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்: தமது மனப்போக்கைமாற்றிக் கொண்டதன் காரணமாகவே முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தஞ்சாவூர் இடைத் தேர்தலில் போட்டியிடுவதென்ற தமது முடிவைக் கைவிட்டார்." என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் தெரிவித்தார். இதேசமயம் திரு. சுவாமிநாதனின் கூற்று முற்றிலும் தவறானது என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் திரு. சுவாமிநாதன் தமிழகத்தின் நிலையைப் புரிந்துகொள்ளாமல் தவறான அறிக்கைகளை கட்சித் தலைமையகத்திற்கு அனுப்பியதைஅடுத்தே திருமதி காந்தி தமது முன்னைய முடிவை மாற்றியுள்ளார் என்றும் திரு. இராமச்சந்திரன் கூறியுள்ளார்.

பொறுப்புள்ள தலைவர்களின் பொறுப்பற்ற அறிக்கைகளே தஞ்சை இடைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எழுந்துள்ள சர்ச்சைக்குக் காரணமாகும் என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார். (இ)

## ரயில்விபத்தில் 16 பேர் பலி!

கல்கத்தா, மே 16

கல்கத்தாவில்இருதினங்களின் முன்இரண்டு ரயில் மோதிக் கொண்டதை அடுத்து 16 பேர் பலியாகினர் என்றும் 50 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## மானிப்பாய் கல்வி வட்டார ப. அ. ச. சம்மேளனம்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் கல்வி வட்டாரம் பாடசாலை அபிவிருத்திச் சங்க சம்மேளனம் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26ம் திகதி சனிக்கிழமை காலை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம் சிறப்புரை யாற்றுவார். (கு)

# இந்திராநாடகமே நடத்திக்காட்டினர்

## அத்வாணி கருத்து

புதுடில்லி, மே 21

தஞ்சாவூர் லோகசபை இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக ஆதரவாளர் களைத்தேடி அலைந்த திருமதி இந்திராகாந்தி சுவையான ஒரு நாடகமே நடத்திக் காண்பித்தார். அவரதுநிலை மிகவும் பரிதாபகரமானது.

இவ்வாறு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு எல் கே. அத்வாணி தெரிவித்தார்.

திருமதி காந்தி தஞ்சாவூர் இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து எழுந்துள்ள சர்ச்சை பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே திரு அத்வாணி மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி காந்தி தஞ்சையில் போட்டியிடும் பட்சத்தில் அவருக்கு ஆதரவுஅளிக்கக்கூடாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் திரு எம். ஜி. இராமச்சந்திரனுக்கு கட்டுப்பாடு விதித்துள்ளதாக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கூறி வருவது முற்றிலும் தவறானது என்றும் திரு அத்வாணி தெரிவித்துள்ளார். (இ)

## கட்டைப்பிராய் அம்பாள் உற்சவம்

[யாழ்ப்பாணம்]


இருபாலை கட்டைப்பிராய் முத்துமாரி அம்மன்கோவில் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும். [அ]


வாங்கத்தூண்டுவது!

ராற்ருங்

டெலிவிஷன்

12" கறுப்பு வெள்ளை போட்டபிள் மோடல் 12 PD/PC



உலகிலுள்ள மாபெரும் நிறுவனமொன்றினால் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டு, போட்டிபோடமுடியாத விலையில் விற்கப்படுகிறது.

ராற்ருங் PAL 625 B முறையில் மின்சாரத்திலோ, பாட்டரியிலோ VHF 2-12 UHF 21-69 சனல்களில் இயங்குவது. நல்ல பலமான பெட்டியில் UHF/VHF அன்ரானு உள்ளடக்கியது.

இதனுல் நீங்கள் நன்கு பார்த்து மகிழலாம் ஆகையால் பிரத்தியோகமாக வெளியில் அன்ரானு இணைக்கத் தேவையில்லை வோல்டேஜ் ஸ்டாபிலைஷர் இணைந்திருப்பதால் தங்குதடையின்றி சேவை செய்யும்.

வெளியிலோ உங்களின் காரில் பிரயாணம் செய்யும் பொழுதோ எங்கும் எப்பொழுதும் மகிழ்ச்சி அளிப்பது.

வீடியோ றெக்கோடர் கொண்டது.

நாஷனல் QC குழுவின் பரிசு பெற்றது.

அமெரிக்காவில் அதிக விற்பனையாவது.

விலை ரூ. 1786/-

கட்டுத் தவணைக்குமுண்டு. ஒரு வருட உத்தரவாதம் விற்பனைக்குப் பின் தொழிற் சாலையில் பயிற்கி அளிக்கப் பட்டவர்களால் விசேஷ நிபுணத்துவ சேவை.

இப்பொழுது இலங்கையில் விற்பனையாகின்றது.

ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்பாக்ஸ் என்ரபிறைசஸ்

11, கேப்பெட்டிபொல மாவத்த, கொழும்பு 5. தொலைபேசி 86186

Rio Phone : 7607
(Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS
BIG RIP OFF
(Adults only)

நாகம்ஸ்
[கன்னாகம்]
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சீதாராம கலியாணம்

## தபால் கோஷ்டி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால் ஊழியர்களுக்கும், காங்கேசன்துறை தபால் ஊழியர்களுக்குமிடையில், நடைபெற்ற, வருடாந்த மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில், காங்கேசன்துறை தபால் ஊழியர் கோஷ்டி 10 விக்கெட்டுகளால் வெற்றி அடைந்தன.

இப் போட்டி, வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

21-வது வாரம்
வின்சர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்மன் கலர்
புதிய பிரதி

REGAL Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
(Jaffna)
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் தினசரி 10-30 2-30, 6-15. 9-30.
(யாழ்ப்பாணம்)
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனு
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
ஃ ஜெயதேவி ஃ ஏகாம்பரம்
ஃ மணிமேகலை ஃ தர்மலிங்கம்
இன்னும் பலர் திரைப்பட நடித்த
எங்களில் ஒருவன்

தினசரி 4 காட்சிகள்
மனோகரா
(யாழ்நகர்)
ஸ்ரீகாந்த் – பிரமிளா
லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
(புதிய பிரதி)

3-வது வெற்றி வாரம்!
சாந்தி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்நகர்)
இராஜேந்திர குமார் — இரட்டைவேடம் —
ஹேமமாலினி—பானுரேகா—
"கோரா அவுர் காலா"
ஹிந்தி ஈஸ்ட்மன் வண்ணத் திரைவோவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
ஜெமினி—வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை (புதிய பிரதி)

லோ
(சுந்நாகம்)
போன்: 7698
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
வியட்நாம் வீடு

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாலை குலுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 720 ம் இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

**19 C 0914**

ரூ. 1,00,000

இரண்டாவது பரிசு;

**02 Y 0361**

ரூ 40,000

மூன்றாவது பரிசு

**06 N 0475**

ரூ 10,000

தலா 1035 ரூபா வீதம் 100 ஆறுதல் பரிசுகள்;-

| | |
|---|---|
| 08 A 0299 | 15 A 0111 |
| 18 A 0533 | 22 A 0045 |
| 24 A 0428 | 31 A 0481 |
| 31 A 0841 | 06 B 0675 |
| 16 B 0130 | 29 B 0054 |
| 06 C 0546 | 15 C 0886 |
| 23 C 0281 | 07 D 0755 |
| 20 D 0880 | 21 D 0345 |
| 07 E 0686 | 18 F 0359 |
| 23 F 0219 | 30 F 0013 |
| 02 G 0915 | 03 G 0595 |
| 27 G 0074 | 05 H 0835 |
| 15 H 0118 | 21 H 0860 |
| 23 H 0693 | 28 H 01[illegible]0 |
| 07 J 0848 | 03 J 0585 |
| 16 J 0313 | 26 J 0283 |
| 30 J 0656 | 06 K 0657 |
| 09 K 0564 | 11 K 0004 |
| 11 K 0326 | 15 K 0668 |
| 20 K 0412 | 21 K 0115 |
| 23 K 0836 | 29 K 0702 |
| 11 L 0102 | 25 L 0344 |
| 27 L 0271 | 09 N 0478 |
| 13 N 0041 | 14 N 0498 |
| 8 N 0830 | 01 O 0994 |
| 02 O 0904 | 06 O 0456 |
| 25 O 0400 | 26 O 0373 |
| 02 P 0662 | 15 P 0892 |
| 29 P 0633 | 11 Q 0643 |
| 19 Q 0795 | 20 Q 0428 |
| 24 Q 0252 | 25 Q 0405 |
| 32 Q 0214 | 14 R 0458 |
| 23 R 0299 | 27 R 0787 |
| 29 R 0279 | 15 S 0206 |
| 21 S 0934 | 04 T 0095 |
| 10 T 0292 | 11 T 0577 |
| 15 T 0462 | 21 T 0048 |
| 04 U 0695 | 16 U 0743 |
| 23 U 0405 | 25 U 0124 |
| 21 U 0669 | 31 U 0219 |
| 02 V 0171 | 02 V 0440 |
| 05 V 0830 | 12 V 0823 |
| 19 V 0195 | 21 V 0224 |
| 25 V 0905 | 31 V 0154 |
| 31 V 0364 | 05 W 0868 |
| 01 W 0535 | 23 W 0078 |
| 24 W 0942 | 02 X 0663 |
| 03 X 0852 | 07 X 0403 |
| 28 X 0997 | 24 Y 0736 |
| 26 Y 0820 | 15 Z 0007 |

## அ. இ. பாடசாலை நிறுவன ஊழியர் சங்கம்

[தெல்லிப்பழை]

அகில இலங்கை பாடசாலை நிறுவன ஊழியர் சங்கத்தின் வடபிரதேச வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் யாழ், மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வடமாநிலக்கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரியும் நல்லூர் கிராமசபை விசேட ஆணையாளருமான திரு ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கா மாணிக்கவாசகர். துணைத் தலைவர்கள்

வெஸ்லி
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-ராதாசலுஜா
இதயக்கனி

உதைபந்தாட்டம்:

# இருபிரிவுகளிலும் நாவாந்துறை சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்டலீக் நடாத்திய ஏழுபேர் பங்குபற்றும் நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியில் ஏ. பிரிவில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும் 'பி' பிரிவில் நாவாந்துறை இளைஞர் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் சாம்பியன் வெற்றிக் கிண்ணங்களைத் தட்டிக் கொண்டன.

யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில், மொத்தம் 14 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன. 'ஏ' பிரிவின் இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும், மோதியதில் சென்.மேரிஸ் கழகம் 2-1கோல்களால் வெற்றிபெற்றது. இப் போட்டிக்கு திரு. ஆர்.சவுந்தரராஜா மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவு இறுதியாட்டத்தில், நாவாந்துறை இளைஞர் சென். நீக்கிலாஸ் விளையாட்டுக் கழகமும். கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிய ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததால், இறுதியில் வழங்கப்பட்ட "பெனல்டி". உதைமூலம், சென். நீக்கிலஸ் கழகம் 2-1 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு எஸ். எம். பிலேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டிக்கு, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட, முன்னுல், யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகஸ்தர், திரு. எம். கிருபாகரன் சாம்பியன் கோஷ்டிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களைப் பரிசளித்தார்.

"விளையாட்டுப் போட்டிகள்

## ஒற்றுமையை ஏற்படுத்த ச. ச. நிலையங்களுக்கு உதவுகின்றன"

(பலாலி)

"சனசமூக நிலையங்கள் மக்களிடையே நல்லுறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்கு இத்தகைய போட்டிகள் உதவுகின்றன. இளைஞர்களின் சக்தியை ஒன்று திரட்டி கிராமமுன்னேற்றத்திற்குச் செய்யும் ஆக்கபூர்வமான இச்செயல்கள் புத்துணர்வையும் விழிப்புணர்ச்சியையும் தட்டி எழுப்புகிறது."

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்திற்காவும், ஈழநாடு வெற்றிக் கிண்ணத்துக்காகவும் நடாத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பரிசில்கள் வழங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதம அமைப்பாளர் திரு. பொன். குமாரசாமி பேசுகையில்,

"அமரர் செல்லப்பா குமாரசாமி பல போராட்டங்களை முன்னின்று நடாத்தி சிறை வாழ்வையும் அனுபவித்த மகான். இத்தகைய இலட்சியவாதியின் ஞாபகார்த்தமாக இச்சுற்றுப் போட்டியினை நடாத்துவது வயாவிளான் கிராமத்தின் உன்னத போக்கினையே காட்டுகிறது" என்றார்.

நிலையமைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இப் போட்டிகளின் இறுதியில் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமையில்பரிசளிப்பு விழா இடம் பெற்றது.

6 வீரர் ஓவர் கேம் போட்டியிலும், 4 வீரர் ஓவர் கேம் போட்டியிலும் திருநெல்வேலி சிவன் வி. கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டு "ஈழநாடு" வெற்றிக்கிண்ணத்தையும், "அமரர் செல்லப்பா குமாரசாமி" ஞாபகார்த்தச் சுற்றுக்கேடயத்தையும் ஒருங்கே பெற்றுக்கொண்டது.

தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் தமது தலைமையுரையில், இச்சுற்றுப் போட்டி வருடா வருடம் நடாத்துவதன் மூலம் சனசமூக நிலையம் உயர்ந்த இலட்சியத்தை மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னின்று நடாத்திவந்த செயலாளர் திரு. எம். ஜெகநாதன் பாராட்டுக்குரியவர் என்றார்.

செயலாளர் திரு. எம். ஜெகநாதன் விளையாட்டுக் கழகங்கள் கொடுத்த ஒத்துழைப்புக்கும் அன்பளிப்புகளுக்கும் நன்றிதெரிவித்துப் பேசினார்.

செற். அப் போட்டியின் சாம்பியனாக அச்சுவேலி ஸ்ரீவிக்னேஸ்வராக் வி. கழகம் தெரிவு செய்யப்பட்டு ஆசிரியை திருமதி ஈ. எஸ். முருகையா அன்பளிப்பு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது. (ச)

திரு எஸ் கந்தையா, திரு கே சண்முகம், செயலாளர்; திரு அ குலசேகரம், துணைச் செயலாளர்: திரு க பொ நடனசிகாமணி, பொருளாளர்: திரு எஸ் சிவசங்கரன்.

## அபிவிருத்திச் சங்கம்

[தெல்லிப்பழை]

7 குப்பிழான் விக்னேஸ்வரா வித்தியாசாலையில் அதிபர் திரு. க. நடராசா தலைமையில் பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. நடராசா. துணைத்தலைவர்கள்: திரு த தருமலிங்கம், திரு நா செல்வநாயகம், பொதுச் செயலானர்: திரு க பொ நடனசிகாமணி, துணைச்செயலாளர் திரு மா சின்னத்துரை, பொருளாளர் திரு சி சிவஞானம்

ஐவர்கொண்ட செற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## கோப்பாய் சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்க் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, ஆவரங்கால் மகாஜனக் கல்லூரியை இறுதியாட்டத்தில் தோற்கடித்துச் சாம்பியன் கிண்ணத்தைப்பெற்றது. [அ]

# வல்வை மக்கள் சாதனை புரிந்துள்ளனர்

## வல். நகரசபைத் தலைவர் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் வகையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் வல்வெட்டித் துறை மக்கள் ஆட்சியாளருக்கு நல்ல முடிவைத் தெரிவித்ததன் மூலம் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளனர்.

இவ்வாறு யாழ். கச்சேரியில் வல்வெட்டித்துறைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது வல்வெட்டித் துறை நகரசபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட திரு ச. ஞானமூர்த்தி பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

பூகோள ரீதியாக நோக்கும்போது ஈழத்தின் தலையான பகுதி யாழ்ப்பாணம். இலங்கையின் அதி தலைசிறந்த மூளைசாலிகளைப் பெற்றெடுத்த நாடு யாழ்ப்பாணம். குறிப்பாக வல்வெட்டித் துறையில் தலைசிறந்த அறிவாளிகளும், வீரர்களும் பிறந்து உலக சாதனைகள் பலவற்றைச் சாதித்து தமிழரின் புகழை உலகெலாம் பரப்பியவர்கள்.

நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் எதிர்க்கட்சி இல்லாது தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் ஒரே ஒரு கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை தேர்ந்தெடுத்த பெருமை வல்வெட்டித் துறை மக்களையே சாரும். [கொ-இ]

# கூட்டணிக்கு அரியாலையில் அதிக வாக்குகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபை தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரியாலை வட்டாரங்களிலேயே கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன.

10 ம் வட்டாரத்திலுள்ள அரியாலை சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையத்தில் கூட்டணிக்கு ஆகக் கூடுதலான வாக்குகளாக 89.12 வீத வாக்குகள் (1451) கிடைத்துள்ளன.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை வாக்களிப்பு நிலையங்களில் 84.65 வீத வாக்குகள் கூட்டணிக்கு கிடைத்துள்ளன. [உ]

# "தமிழின் லட்சியத்துக்கு கிடைத்த வெற்றி"

## பரு. நகரசபைத் தலைவர் உரை

[யாழ்ப்பாணம்]

சட்ட ரீதியாக கட்சி ரீதியாக நடந்த தேர்தலில் கூட்டணி உறுப்பினர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கூட்டணி உறுப்பினர்கள் பெற்ற வெற்றி கட்சிக்கும், பொதுமக்களுக்கும் குறிப்பாக தமிழ்ப்பேசும் மக்களுக்கும் அவர்களின் இலட்சியத்திற்குக்கிடைத்த வெற்றியாகும்.

யாழ் கச்சேரியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது பருத்தித்துறை நகரசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ம. வேலும்மயிலும் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எமது தொகுதி எம் பி துரைரத்தினம் நோய்வாய்ப்பட்டிருந்த போது, மானிப்பாய் எம் பி திரு வி தர்மலிங்கம், உடுப்பிட்டி எம் பி திரு இராஜலிங்கம் ஆகியோர் இரவு பகலென்று பாராது கட்சியின் வெற்றிக்காக அயராது உழைத்தனர் மக்களின் ஒத்துழைப்பால்தான் எம்மால் ஆட்சிக்கு வரமுடிந்தது. எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இப்பொறுப்பை கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படாது பாதுகாத்து பருத்தித் துறை நகரின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவோம் அதற்கு மக்களின் ஒத்துழைப்பையே நாம் நாடி நிற்கிறோம். [கொ--இ]

# தமிழ்மக்கள் அரசுக்கு நல்ல பாடம் புகட்டிவிட்டனர்

## சாவ. நகரசபைத் தலைவர் கருத்து

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக்கூட்டணி சாவகச்சேரித் தொகுதியை மட்டுமல்ல வடபகுதி முழுவதையுமே கைப்பற்றியதுடன் வல்வெட்டித்துறையில் எதிரணியே இல்லாமல் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டதன் மூலம் தமிழ்மக்கள் ஆட்சியாளருக்கு நல்ல பாடம் ஒன்றைப் புகட்டியுள்ளனர்.

இவ்வாறு யாழ் கச்சேரியில் சாவகச்சேரித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது சாவகச்சேரி நகரசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு எஸ் கே திரவியநாயகம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வெற்றிபெற்றுள்ள நாம் வெற்றியைக் கண்டு இறுமாப்புக்கொள்ளாது தேர்தலில் தோல்வியுற்ற கட்சியினரின் மனம் புண்படும்படி நடவாது அவர்களுடன் நல்லமுறையில் நடந்து இந்த நாட்டை பொன்கொழிக்கும் நாடாக மாற்றியமைக்கவேண்டும்.

விகிதாசார பிரதிநிதித்துவம் என்ற புதிய தேர்தல் முறை அமுல்நடத்தப்பட்டதால் சாவகச்சேரித் தொகுதியில் மூன்று பிரதிநிதிகளை இழந்துள்ளனர். அன்றேல் கூட்டணி பதினொரு தொகுதியையும் கைப்பற்றியிருக்கும்.

எமது தொகுதி எம் பி திரு. வி. என். நவரத்தினம் நோய்வாய்ப்பட்டிருந்ததனால் தேர்தல்பிரசாரத்தில் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. அவரில்லாத இடத்திலும் மக்கள் அவர்மீது வைத்த நம்பிக்கையினாலும் அவர் சார்ந்த கூட்டணி மீது கொண்ட பற்றினாலும் எமது கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

கிளிநொச்சி எம் பி திரு. வி ஆனந்தசங்கரி தேர்தலின் போது தமது முழுநேரத்தையும் சாவகச்சேரித் தொகுதியில் செலவிட்டு கூட்டணியின் வெற்றிக்காக அயராது உழைத்தார். அவரது சேவையை சாவகச்சேரி மக்கள் பாராட்டாது இருக்க முடியாது. [கெ-கொ-இ]

# சன்மார்க்க சபைக்கு இன்று விஜயம்

[யாழ்ப்பாணம்]

சென்னை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் சாரதா வித்தியாலய அதிபரும் ஆசிரியைகளும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணிக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபைக்கு விஜயம்செய்யவுள்ளனர்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் இவர்களை வரவேற்று உபசரிப்பர். வித்தியாலய ஆசிரியைகள் "தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் தெய்வீக வாழ்வு" பற்றிச் சொற்பொழிவும், பஜனையும் நிகழ்த்துவர். [கொ]

# தமிழ்ஈழ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக இருக்கின்றேன்' என்று தெரிவித்த திரு. அ. அமிர்தலிங்கம்,

"எமது உரிமைகளை வென்றெடுக்க நாம் சாத்வீக வழிகளைக் கடைப்பிடித்தோம். தொடர்ந்து மேற்கொள்வோம், எமது பிரச்னை தீராத வரை, அடிமை நிலையை யார் என்ன கூறினாலும் நாம் ஏற்கமாட்டோம். எங்களைப் பேசவிடாமல் இங்கு கூச்சல் போடுவதன் மூலம், உங்களை நீங்களே தரம் குறைத்து, நாட்டுக்கும் அவப் பெயரைத் தேடிக் கொடுக்கின்றீர்கள். இச்சபையில் தனி ஒருவனாக நிற்கும்நிலை ஏற்பட்டாலும் எமது உரிமைக்காக வாதாடியே தீருவோம். ஒரு இலட்சியத்துக்காக இங்கு வந்த எங்களை, எந்த எதிர்ச்சட்டங்களாலும் தடுத்துவிட முடியாது. சட்டங்களால் எமது பிரச்னைகளைத் தீர்க்க முடியாது" என்றும் கூறினார்.

### மத்யூ குற்றச்சாட்டு

அமைச்சர் சிறில் மத்யூ பேசுகையில், "தமிழர் விடுதலை கூட்டணியின் ஒரு பிரிவுதான் தமிழீழப்புலிகள்" என்றார். (ம)

# மக்கள் விடுதலை முன்னணி கட்டுப்பணம் [ரூ. 15,750] இழந்தது!

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட மக்கள்விடுதலை முன்னணி தனது 15,750ரூபா கட்டுப்பணத்தை இழந்தது.

மக்கள் விடுதலை முன்னணி அரசியல்கட்சியாக தேர்தல் ஆணையாளர் அங்கீகரிக்காததையடுத்து சுயேச்சையாகப் போட்டியிட்டது.

புதியதேர்தல் அமைப்பின் படி சுயேச்சை வேட்பாளர்கள் தலா 250 ரூபாவைக்கட்டுப்பணமாகச் செலுத்தவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு கட்டுப்பணம் தேவையில்லை.

இதற்கிணங்க மக்கள் விடுதலை முன்னணி கொழும்பு மாநகரசபைக்கு 63 வேட்பாளர்களை நிறுத்தி 15,750 ரூபாவைக் கட்டுப்பணமாகச் செலுத்தியிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணி 7 வீதத்திற்கும் சற்றும் அதிகமாக 14,503 வாக்குகளைப் பெற்றிருந்தது. (இ)


# ஓமானில் வெற்றிடங்கள்

ஓமானில் உள்ள பெரியதொரு நிறுவனத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு

கட்டிட போர்மன், ட்ருவ்ஸ்மென், குவான்டிட்டி சேவேயர்ஸ், கணக்காளர்கள் (நிர்மாணிப்பு நிறுவனங்களில் அனுபவம்), மேசன்கள், மரவேலைக்காரர்கள், உருக்கு நிர்மாணிப்போர், பெற்றோல் & டீசல் மெக்கானிக்குகள், பெயின்டேர்ஸ், கனரக வாகன ட்றைவர்கள், (புல்டோசர் & கிறேன்), எலெக்ரிசன்ஸ், நிர்மாணிப்பு வேலை தொழிலாளர்கள் (நல்ல தேக அமைப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும்)

இவர்கள் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ளவர்களாகவும், ஆங்கிலத்தில் வேலை செய்யும் அறிவுள்ளவர்களாகவும், 25க்கும் 45க்கும் இடைப்பட்ட வயதுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

எமக்கு இலங்கையின் எந்தப் பாகத்திலும் உப-கந்தோர்களோ, அல்லது ஏஜண்டுகளோ கிடையாது. நேரில் வரவேண்டாம் இங்கோ அல்லது வெளிநாட்டிலோ எந்தவித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. இரண்டு புகைப்படங்கள், மூன்று முத்திரையிட்ட என்வலப்புகள், இரு போஸ்ட் கார்ட்டுகள் ஆகியவற்றுடன் உங்கள் விண்ணப்பங்களை ஜூன் 10-ந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

CEYROC DECORATORS & CONSULTANTS

P. O BOX: 19, DEHIWALA.

Labour Licence No. 166. 2513


# மரண அறிவித்தல்

## மு. பொன்னம்பலம் (ஸ்ரேசன் மாஸ்டர்)

கரும்பனையைச் சேர்ந்த மலாயன் பென்சனர் முருகேசன் பொன்னம்பலம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற பொன் செல்லத்தின் அன்புக் கணவரும், திருமதி இமயதிதேவி [சுங்க இலாகா], திருச்சிற்றம்பலத்தின் அன்புத் தந்தையும் நடராசா [கணக்கு ஆய்வுப் பகுதி], திருமதி இராசம்மா ஆகியோரின் மாமனாரும், சுலோஜனா ராஜ்குமார், சுனித்தா, சுஷ்யந்தி, ஷாமினி ரங்கராஜ், நிலாமினி, சுதாமினி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகைக்காக கரும்பனை குபேரவாசா' இல்லத்திலிருந்து கிரிமலை செம்பொன் மயானத்திற்கு இன்று [22-5-79] செவ்வாய்கிழமை பி. ப. 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 2523

# சைவபரிபாலனசபை - யாழ்ப்பாணம்

## சமய விரிவுரைகள்

இடம்: சைவ பரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம மண்டபம்

காலம்: 22-05-79 (இன்று) செவ்வாய்க்கிழமை
மாலை 6-00 மணி

### "சைவமும் தமிழும்"

சித்தாந்த சிகாமணி
திரு. க. வடிவேலாயுதம் (எம். ஏ.)
(தமிழ்த்துறைத் தலைவர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி)

### "சேக்கிழார் கண்ட மகளிர்"

திருமதி. சந்திரா பார்த்தசாரதி (எம். ஏ.)
(தமிழ்த்துறை, பேராசிரியை, ஸ்ரெல்லாமேரி மகளிர் கல்லூரி, சென்னை)

### "தமிழர் பண்பாடு"

கலைமணி திரு. வே. கிருட்டினசாமி (எம். ஏ.)
(துணைப் பேராசிரியர், கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை)

### "காரைக்கால் அம்மையார்"

திருமதி. வசந்தா ராமச்சந்திரன் (எம். ஏ.)
(எதிராஜ் மகளிர் கல்லூரி, சென்னை)

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

த. சண்முகலிங்கம்,
செயலாளர்.

2522

# மரண அறிவித்தல்

## க. பொன்னையா

சாவகச்சேரியைச் சேர்ந்த வவுனியா வர்த்தகர் க. பொன்னையா காலமானார். இவர் சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம், மங்கையர்க்கரசி (ஆசிரியை, பரிசுத்த சேவியர் கல்லூரி, மன்னார்), பரராஜசிங்கம் [தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்], குமாரசிங்கம் (நீர்ப்பாசனப் பொறியியலாளர் கொழும்பு), சிவபூரணம் (யாழ். வளாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற இராமநாதன் (முன்னாள் நகரசபைத் தலைவர்), தங்கம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மா இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 5-79 (இன்று) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சாவகச்சேரி இந்து மயானத்தில் நடைபெறும். 2524

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Recegitesred as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945,73 The Eelanaadu P B No: 49. Telegram: Eelanaadu Telephone 489.